# THE MORNING STAR.

**Vol. 62.** **Jaffna, Thursday 3rd of July. 1902.** **No 14**

Righteousness Exalteth a Nation but Sin is a Reproach to any People.

*RECEIPT FOR THE MORNING STAR.*

| | | |
|---|---|---|
| Batticotta. | Messers K. Gnanaprakasem I. Vyramuttoo, M. Arulananthem S. Vethaparanam, A. Katigasu, R. Ramalingam | 7- 50 |
| Moolai | Messrs. R. Sinnatamby, K. Ampalavaner V. Narany, A. Joseph, S. Appapilly | 7- 00 |
| Araly | Messrs, D. Ampalavaner, A. Arumugam, V. Valuppilly, A. Chelliah, K. Veluppilly. | 6- 25 |
| Sangany | Messrs. R. Winslow A. Kindiah. V. Seevaratnam. M. Nagalingam | 5. 00 |
| Straits Settlements | Messrs. V. Eliatamby & Daniel Poor | 9. 00 |
| Colombo | Mr Louis Heib B. A. | 4. 25 |

THE CEYLON STEAMSHIP COMPANY LIMITED.



Lady Havelock and Lady Gordon are appointed to sail from Kangesanturai for Colombo on the undermentioned dates:—

Via Paumben.

| | | | |
|---|---|---|---|
| Lady Havelock | 8th July | 1902. |
| " " | 22nd " | " |
| " " | 5th August | " |

Via Point Pedro.

| | | |
|---|---|---|
| Lady Gordon | 14th July | " |
| " " | 28th " | " |

W. MATHER & SON, Agents

Alexander Bros & Co

The Largest General Stores in the North.

**Oilmanstores of Every Description.**

Medicines, Soaps, Perfumery

*Tobaccos & Cigars*

**EARTHEN-WARE** Glassware & Fancy Goods

Elwood's Helmets

Pith Sun Hats & Straw Hats. A large Assortment

**JUST OPENED UP** do do } Inspection solicited

*STATIONERY*

**GUNS, BICYCLE ACCESSORIES**

CUTLERY, STEEL TRUNKS,

*UMBRELLAS, BOOTS & SHOES.*

All goods guaranteed to be at the lowest possible prices compatible with quality. HEAP goods are often DEAR, at ANY PRIE, Specially in Oilmanstores,

All tinned goods should be of the best quality, and undue cheapness is invariably synonymous with second or aven third class provisions. A Fair price must be paid for a good article.

**TAILORING DEPARTMENT.**

We have some first class men working under us.

Trial Solicited. Work finished in shortest time possible.

**Our CIGARS "Flor De Jaffna" These have already got a name & fame.**

☞**Our Omum Water. All houses should have a bottle of this at this time**

Alexander Brothers & Co.

Importers of British & Foreign Goods,

**THE JUNCTION.**

JAFFNA.

THE JAFFNA COMMERCIAL CORPORATION LIMITED.

Remittances can be made Between, Jaffna, Batticaloa, and Colombo Both by wire and Draft To and From

**Colombo and Jaffna.**

| | |
|---|---|
| Commission on wire transfer above Rs.500.00 | 1° |
| on wire transfer under " 500.00 | 2° |
| on draft on sums above " 500.00 | ½° |
| on draft on sums under " 500.00 | 1° |

**From Jaffna to Batticaloa.**

| | |
|---|---|
| Commission on wire transfer | ½° |
| Commission on Draft | 1° |

**From Batticaloa to Jaffna.**

| | |
|---|---|
| Commission on wire transfer | 1° |
| Commission on Draft | ½° |

To and from

**Colombo & Batticaloa**

Commission on wire transfer 1½°

Commission on Draft and cashing Colombo cheques ¾°/₀ on sums above Rs. 250.00

1o/o on sums under Rs. 250.00

**From Jaffna to Madras Calcutta & Rangoon**

Commission on Draft { Madras & Calcutta ¾° / Rangoon 1 o/o

| | |
|---|---|
| Colombo Bankers. | The National Bank of India Ltd. |
| Madras | The National Bank of India Ltd. |
| Calcutta | The National Bank of India Ltd. |
| Rangoon | The National Bank of India Ltd. |
| Batticaloa | The Jaffna Commercial Corporation Ltd |
| Jaffna | The Jaffna Commercial Corporation Ltd |

WILLIAM MATHER.

Managing Director.

BRODIE & Co. Colombo.

Importers of *Oilmanstores Wines and Spirits, Estate Tools and Requisites* at lowest rates. Price list on application.

*"Red Star" Portland Cement*

As supplied to the Madras Municipality

Guaranteed Best Quality. Rs 10 per barrel

BRODIE & Co. Colomb.

ANKETELL'S ILLUSTRATED PRONOUNCING ENGLISH-TAMIL DICTIONARY.

Price *Twelve Annas*. Postage 1½ as Ten percent discount on ten copies and over. Apply to S. P. C. K. Press. Vepery, Madras, and Booksellers in Ceylon.

NOTICE OF REDUCTION.

We are offering about 50 dozen tins of Moir's Celebrated Pure Homemade Jams, Assorted, at Rs. 4.00 per dozen cash to make room for fresh arrivals expected.

The above received during X'mas 1901, and are in excellent condition.

Alexander Bros: & Co.
"The Junction."
Jaffna.

Portraits of

H. M. KING EDWARD VII

| | | |
|---|---|---|
| Half tone— | Carte Size | 6 cts each |
| | Cabinet | 12 " " |
| Photographs— | Carte Size | 50 cts each |
| | Cabinet | 75 " " |

S. K. LAWTON & Co.
Manipay Jaffna.

In Ever Loving Memory
Of The Late
MR. SAMUEL TAPPEN MUTTIAH
*Broker*, AIETKEN SPENCE & Co.
Died 23rd June 1894.

"Father in thy gracious keeping
Leave we now thy servant sleeping."

(Inserted by his sorrowing widow and children.)
Jaffna 23rd June 1902.

ORDER NISI.

In the District Court of Jaffna.

Testamentary Jurisdiction | No. 1277.

In the Matter of the Estate of the late Kathirkamer Tampiayah of Chandilippai. Deceased.

Mailvakanam Perampalam of Chandilippai. Petitioner.

Valliammaipillai widow of Kathirkamer Tampiayah of Chandilippai. Respondent.

This matter of the Petition of Mailvakanam Perampalam of Chandilippai praying for Letters of Administration to the estate of the abovenamed deceased Kathirkamer Tampiayah of Chandilippai coming on for disposal before W. R. B. Sanders Esquire, Distrtct Judgo, on the 20th day of June 1902 in the presence of Mr. Tambiah S. Cooke. Proctor, on the part of the Petitioner and affidavit of the Petitioner dated the 16th day of June 1902 having been read, it is declared that the Petitioner is the father-in-law and next of kin of the said intestate and is entitled to have Letters of Administration to the estate of the said intestate issued to him unless the Respondent or any other person shall on or before the 31st day of July 1902 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

Signed this 20th day of June 1902

W. R. B. Sanders
District Judge.

## Local and General.

**Weather.** Two weeks ago this evening a heavy thunder storm passed over the peninsula giving us considerable of a rainfall. At Batticotta over 2 inches was registered. The temperature fell and it seemed as if the monsoon had finally burst, but the wind though blowing steadily has not been up to the average monsoon wind in strength, and we are forced to conclude that our South West monsoon has been more or less of a failure this year.

**Coronation Honours.** Three were given the title of C. M. G. last week in Ceylon viz. Captain Donnan the Ex-Master Attendant. the Maha Mudaliar, and our own Govt. Agent Mr. R. W. Ievers M. A. These gentlemen are worthy to receive this honour and are to be congratulated. Especially sincere are our congratulations to the Government Agent of the N. P. now Acting Colonial Secretary. Long may he live to enjoy this well deserved honour.

**Coronation.** Jaffna shared the common fate with the remaining vast British empire, of the sad incident of the Coronation of King Edward VII. It is indeed very unfortunate, that at the point of carrying out the festivities of the Coronation long in preparation with enormous expenditure of money and time, the empire should suffer a disappointment. We should not, however, forget the aphorism, that there is many a slip between the cup and the lip. The Ruler of the Universe will set matters aright, and we shall soon see brighter days. *Com.*

**Boer Prisoners.** The Boer prisoners who are quartered at Urugasmanhandiya. about 400 in number will return to South Africa, on the 5th inst. by the steam ship "Templemore." *Com.*

**Feeding the Poor.** This item of the coronation programme was fully and satisfactorily carried out. So far as we are aware, the poor was well treated at Jaffna Fort, on the 26th inst. with unboiled rice, cloth and 5 cts. each. At Pt. Pedro on the 28th inst. with boiled rice and at Mallagam on the 28th inst. with unboiled rice and cloth. *Com*

**Scholastic.** Although a little after the event, we should not omit to notice the success of Mr. M. A. Tampoo the fourth son of our Magistrate Mr. Tampoo, as the second Senior Optime, Cambridge University. No other Ceylon student in England we are told, has hitherto reached this standard of scholarship. We congratulate young Mr. Tampoo and wish him further success in iife. *Com.*

**Obituary.** We regret to record the death of Miss Stephenson in England. who was for about 10 years the lady principal of the Vempadi Girls Boarding school, Jaffna. The news of her death was received here last week by letter from Mrs. Trimmer. In the Wesleyan church, Jaffna, a special sermon was preached in memory of the deceased. The large and beautiful organ of the church, it is said, was bought by money raised by the late Miss Stephenson when she was in England on furlough about five years ago. *Com.*

**Personal.** Mr. V. Waitilingam, Foreman Plate-layer of the Perak State railway, is on a visit to his relatives and friends after hearing of the death of his beloved wife which took place 3 months ago at his residence at Sandilipay. *Com.*

**Obituary.** We have received a long obitnary notice (for which we have not space] of an old student of the Batticotta Seminary named S. Gnanapragasam otherwise known as Canapathipillai Thamotharampillai. He died at Araly on the 22nd inst. He was a man highly connected and greatly respected. The surviving members of the old Batttcotta Seminary cannot be many.

**Communications.** We have been obliged to postpone the publishing of one or two communications to the next issue, owing to want of space.

### CORONATION FUND.

| | |
|---|---|
| Total already acknowledged | Rs, 559 |
| C. Murugasapillai | 10 |
| Dr. Arumugam | 5 |
| J. Don Manuel | 10 |
| Proctor Strantenberg | 5 |
| Sister Faith Hunter | 5 |
| Sister Gertrude Nettleship | 5 |
| S. Eliatamby | 5 |
| Rev. R. G. Butterfield | 10 |
| C. Brayne | 10 |
| S. Toussaint | 10 |
| F. W. Robertson | 10 |
| T. M. Tampu | 20 |
| A. M. Few | 5 |
| — Lane | 5 |
| E. A. Lebbe | 5 |
| Issac Tambyah | 10 |
| M. Asaipillai | 5 |
| V. Casipillai | 10 |
| B. Santiagopillai | 5 |
| S. Tambiahpillai | 5 |
| S. Kandiah | 5 |
| M. Poverayasingham | 5 |
| M. T. Kanagasabai | 5 |
| R. Kandiah | 5 |
| A. Sivakelandu | 5 |
| Small sums through Secretary of District Court | 10 |
| S. A. Edward, B.A. | 5 |
| J. A. Bahar | 5 |
| Ellis Kock | 10 |
| M. Cumarasooriar | 10 |
| R. H Phillips | 5 |
| S. P. Lawton | 5 |
| P. Mdr. Ilankanayagan Mdr. | 5 |
| Levi Spencer | 5 |
| T. R. Ward | 10 |
| H. Vaninasingham | 10 |
| S. K. Lawton | 5 |
| J. K. Chanmugam, B.A. | 5 |

Total to June 19th Rs. 829 00

W. T. Garrett,
Hon. Treas.
Coronation Fund.

[We understand that the full amount needed to meet all expenses connected with the Coronation festivities, was raised before the 26th. This is what we expected and speaks well for the loyalty of Jaffna. *Ed. M. Star.*]

# உ த ய ❀ தா ர கை.

நீதி இராச்சியத்தாரை உயர்த்தும், பாவமோ எந்தச் சனங்களுக்கும் இகழ்ச்சி.

கூ௨ம் புத்தகம்.] யாழ்ப்பாணம், க௬௦௨ம் ஹூ ஆடி மீ ௩௨ வியாழக்கிழமை. [சங்கியை. கச


## இலங்கைப் புகைக்கப்பற் கொம்பனியாரின்



புகைக்கப்பல்கள் பின்வரும் தேதிகளில்கொழும்புக்குப்போகவிருக்கின்றன.

| | |
|---|---|
| கோடன்காங்கேசன்றுறையிலிருந்து பருத்தித்துறைவழியாக | 1902. ஆடி மீ 14உ |
| | " " 28 |
| அவலக் காங்கேசன்றுறையிலிருந்து பாம்பன்வழியாக | " " 8 |
| | " " 22 |
| அவலக் காங்கேசன்துறையிலிருந்து பாம்பன்வழியாக | " ஆவணி 5 |
| | " |

W M MATHER & SON. Agents

NOTICE·

Bulk Petroleum
Tank Cart Sales
Price to--day

Per Gallon.........................58 Cts.
Per Bottle............................12 cts

கொழும்புக் கொம்பெனியின் திறமான மண் எண்ணெ தகரவிலையிலும் கலன்விலை அதிகதூரம் குறைக்கப்பட்டிருக்கின்றது. வாங்கிச் சோதனைபண்ணிப்பாருங்கள். வெகுலாபம். பீப்பாவண்டிவில் திங்கட்கிழமை காலமே சங்கானைச் சந்தையிலும், பின்னேரம் தொல்புரம் அம்மன்கோயிலடியிலும், செவ்வாய்க்கிழமை காலமே பண்டத்தெருப்புக் கோவிலடியிலும், பின்னேரம் மாதகல் இளவாலையிலும், புதன்கிளமை காலமே மானிப்பாய் ஆனைக்கோட்டையிலும், பின்னேரம் சோரியிலும், வியாளக்கிழமைகாலமே கொக்குவில இணுவில் சுண்ணாகச் சந்தையிலும், பின்னேரம் தெல்லிப்பளைக் கோயிலடியிலும், வெளளிக்கிழமை காலமே குரும்பைகட்டி வசாவிளானிலும், பின்னேரம் ஆவரங்கால் அச்சுவேலிச் சந்தையிலும், சனிக்கிழமை காலமே புத்தூர் சிறுப்பிட்டிகோப்பாயிலும், பின்னேரம் கைக்குளசந்தையிலும் விற்பனவுசெய்யப்படும்.

விலை ஆறுபோத்தில் அல்லது ஒருகலன் —58 சதம் ஒருபோத்தல் 12 சதம்.

R. C. Markandan,
Agent of Messrs Delmege Forsyth & Co.
JAFFNA.


## உ த ய தா ர கை.

க௬௦௨ ம் ஹூ ஆடி மீ ௩௨.

### மகுடாபிஷேகம் பின்போடப்பட்டது.
### Coronation Postponed.

"மனிதன் ஒன்றைநினைக்கத் தெய்வம் வேறொன்றைநினைக்கின்றது" என்னும் உலகவாக்கு, பிரித்தானிய இராச்சிய சிம்மாசனபதியாகிய எழாம் எட்வேட் அரசரின் மகுடாபிஷேகவிஷயத்தில் முழுவதும்மெய்யாயிற்று. மகத்துவந்தங்கியஇராசசக்கிரவர்த்தியவர்கட்கு ஆனிமாதம் 26 ந் திகதி முடிசூட்டப்படுமென நாள் நியமித்து லண்டன் நகரியிலே அதற்கான சகல ஆயத்தங்களுஞ் செய்திருக்க, மகுடாபிஷேக கொண்டாட்டத்திற் பங்குபற்றுவதற்காய்ப் பூமியின் நானாதிசைகளிலுமிருந்து இராசாக்கள், இளவரசர்கள், பிரதிஸ்தர்கள், பட்டவர்த்தனர், திரவியசம்பன்னராதியோர் லண்டன்நகரிற் சேர்ந்திருக்க. அத்தினத்திற் பிரித்தானியகலனிகளெங்கும் விழாக்கொண்டாட்டம் நடைபெறுவதற்காய்ச் சகல ஒழுங்குகளுஞ் செய்யப்பட்டுத் தயாராயிருக்க, இங்கிலந்திலுள்ள சேனைகளோடு, இந்தியாவிலும் கலனிகளிலுமிருந்து சென்ற சுதேச பட்டாளங்களுஞ்சேர்ந்து 60,000சேனைவீரர் மகுடாபிஷேக ராசபவனியிற் பங்குபற்றுவதற்கான ஆயத்தத்தோடிருக்க, அங்கிலேய கப்பல்களோடு, பிறராசாங்கத்தவர்களனுப்பிய யுத்தக்கப்பல்களுஞ்சேர்ந்து ராசகணணியஞ்செய்வதற்குத் தெம்ஸ் ஆற்றில் நெருங்கியிருக்க, இராசசக்கிரவர்த்தியவர்கள் மிகக் கடுமையான நோய்வாய்ப்பட்டிருக்கின்றனரென்றும் மகுடாபிஷேகம் பின்போடப்பட்டிருக்கின்றதென்றும் உலகமெங்குஞ் செய்தியறிவிக்கப்பட்டது. மகுடாபிஷேக உற்சவத்துக்கென்று பெருந்தொகைப்பணஞ் செலவிட்டுப் பிரித்தானிய ராச்சியமெங்கும் பெரும்விழாக்களும்வேடிக்கைகளும் நடப்பித்துக் கொண்டாட்டஞ்செய்யக்காத்திருந்தோரெல்லாம் ஏமாந்துபோனதுமாத்திரமன்று, இராயரின் நோயினிமித்தந்துக்கமுமடையவேண்டியவராயினர்.

வயிற்றினுள்ளேயிருக்கும் இரைக்குடல்களிற் சிறியகுடலும்பெருங்குடலும் பொருந்தும் பொருத்திலுண்டானஓர்பிளவையே இராயருக்குற்ற நோயாயிருக்கின்றது. இரைக்குடலிலுண்டான அழற்சியும் வீக்கமுமே இப்பிளவைக்குக்காரணமாயிற்று. மாமிசபோசனிகளாகிய ஐரோப்பிய அமரிக்கருக்குள்ளேயே இந்நோய்மிகுதியுங்காணப்படுவதாம். இவருக்கிந்நோயுண்டுபட்டிருப்பதை வைத்தியபண்டிதர்கள் முந்தியே ஒருவாறுமட்டிட்டிருந்தும், மகுடாபிஷேகச் சடங்கு நிறைவேறியபின் மயக்குமருந்தைக்கொடுத்துச் சத்திரவைத்தியஞ்செய்யும் நோக்கத்துடன் காரியத்தை வெளிவிடாது அடக்கியிருந்தனர். இராயர்க்குச் சற்றே குளிர்பிடித்ததினாற் சிறுகக் காய்ச்சலுமிருக்கின்றதென முதல்வந்த தந்திச்சமாசாரங்கூற, நாரிஉளைவினால் வருத்தப்படுகின்றனரென அடுத்துவந்த தந்திச்சமாசாரங் கூறிற்று. இவையாவும் உள்ளேயுண்டாகிப்பருத்துக்கொண்டுவந்த பிளவையின் வெளிக்குறிகளாயிருந்தன. இராச சக்கிரவர்த்தியவர்கள், தமது மகுடாபிஷேக உற்சவத்திற் சந்தோஷமடையக் காத்திருந்த லட்சக்கணக்கான குடிபதிகள் ஏமாந்துபோகாவண்ணம் தமதுவருத்தத்தை வெளிவிடாது சகித்துக்கொண்டு 23 ந் திகதி திங்கட்கிழமை லண்டன்பட்டணவீதியால் ஒருமுறை சவாரியுஞ்செய்தனர். ஆயினும் பிளவை முற்றிச் சீவமோசத்துக்கேதுவாகும் நிலைக்குவந்தமையால் வைத்தியபண்டிதசிரேட்டர்களாகிய லோட் லிஸ்றர், சேர் பிரதிரிக் திறீவ்ஸ், சேர் தொமஸ் பாளோவென்பவர்கள் தீர்க்காலோசனைசெய்து உடனே சத்திரவைத்தியம்நடத்தல்வேண்டுமெனத் தீர்மானித்து. 24 ந் திகதி இராயர்க்கு மயக்குமருந்துகொடுத்து வயிற்றைக்கீறிப் பிளவையைத் திறந்து இரணத்துக்கும் மருந்துவைத்துக் கட்டிவிட்டனர். பிளவையிலிருந்து 22 அவுன்சு சீழ் எடுக்கப்பட்டதாம். அடுத்த 24 மணித்தியாலத்துக்குள் என்ன துர்க்குறி தோற்றுமோவென வைத்தியபண்டிதர்கள் அதிசாவதானத்தோடு காத்திருந்தனர். 25 ந் திகதி புதன்கிழமை காலையில் மகுடாபிஷேகம் பின்போடப்பட்டிருக்கிறதென் உலகமெங்கும் தந்தியனுப்பப்படடது. இராசசக்கிரவர்த்தியவர்கள் தமது பிரசைகள் ஏமாந்துபோயினரே என்னும் எண்ணத்தாற் துன்பமுற்று, மகுடாபிஷேகம் நிறுத்தப்பட்டாலும் சனங்கள் தமது கொண்டாட்டங்களை நடத்தலாமென்றும், விசேஷமாய் வறிஞர்களுக்குக் கொடுக்க எண்ணியிருந்ததருமத்தை விடாது நடத்தல்வேண்டுமென்பது தமது விருப்பமென்றுந் தெரிவித்தனர். பின்வந்த தந்திகள் இராயரவர்கள் ஆறுதலாய் நித்திரைசெய்து சிறுக ஆகாரமுமுட்கொண்டனரென்றும் இரணமும் காத்திருந்தவாறு சுகப்பட்டுவருகின்றதென்றுங் கூறுகின்றன.

இராயரவர்கள் பூரணசுகம்பெற்று நீண்டகாலத்துக்கு ஆளுகைசெய்தல்வேண்டுமென்பது இப்போது பிரித்தானிய குடிபதிகள் யாவருஞ்செய்யும் பிரார்த்தனையாயிருக்கின்றது. லண்டன்நகரிற் சேர்ந்திருந்த பட்டவர்த்தனர் மகுடவர்த்தனர், பிரதிஸ்தர்களிற் சிலர் தத்தம்தேசங்களுக்குப் போகப்புறப்பட்டுவிட்டனர். யுத்தமரக்கலங்களும் தெம்ஸ்நதியைவிட்டுக் கலைந்துபோகத்துவங்குகின்றன. இராயர்சுகப்பட்டால் புரட்டாசி மாதக்கடைசியில் மகுடாபிஷேகம்நடைபெறுமெனச் செய்திவந்திருக்கின்றது. அப்படியாயின் கலனிகளிலிருந்துசென்ற சேனைவீரரும் பிரதிஸதர்களும் அதுவரைக்கும் லண்டனிலேயே தங்குவார்கள்போலும்.

மகுடாபிஷேக வேடிக்கைகள் விருந்துகளுக்காய்ப் பிரித்தானிய ராச்சியமெங்கும் செலவிடப்பட்ட லட்சக்கணக்கானபொருளெல்லாம் வீணாய்ப்போக, வேடிக்கை விளையாட்டுகள் யாவும் விடப்பட்டனவாயினும் தேசாதிபதியினுத்தரவோடு யாழ்ப்பாணத்திலே செய்யப்பட்டிருந்த சில ஒழுங்குகள் நிறைவேற்றி முடிக்கப்பட்டன.

(1) காலை ஆராதனை.

26 ந் திகதி வியாழக்கிழமை காலையில் கிறீஸ்த ஆலயங்களிலே இராசசக்கிரவர்த்தியவர்கள் நோயிலிருந்து நீங்கிச் சுகம்பெறுவதற்காய் வேண்டுதற் செபஆராதனைகள் நடத்தப்பட்டன.

(2) ஏழைகட்கன்னவஸ்திரமளித்தல்.

வியாழக்கிழமை காலையில் யாழ்ப்பாணமெங்குமிருந்து வறிஞரான சனங்கள் திரளாய் வந்து முற்றவெளியிற் சேர்ந்திருந்தார்கள். 10 மணிவரையில் ஆண்களும் பெண்களும் பிள்ளைகளுமாய் ஏறக்குறைய 3000 ம் பேருக்குக் கோட்டைக்குள்ளே, அரிசி, சீலை, காசு, இவைகள் இராசசக்கிரவர்த்தியின் நாமத்திற் தருமமாய்க் கொடுக்கப்படடன. வந்திருந்த ஒவ்வொருவருக்கும் 5 சதக் காசும் ஒருகொத்து அரிசியுங் கொடுத்ததோடு அதிகம் ஏழைகளான ஸதிரிகளொவ்வொருவருக்கும் 6 யார்ச் சீலையும் பிள்ளைகளுக்கு ஒன்றரை அல்லது 2 யார்ச்சீலையுங் கொடுக்கப்பட்டது. முழுவதிலுங்காசாய் 112 ருபாயும், 36 மூட்டை அரிசியும், 74 துண்டுச் சீலையுஞ் செலவாயின. அரிசியுஞ் சீலையுஞ் செட்டிகளாலும் யாழ்ப்பாண வியாபாரசமுதாயத்தவர்களாலும் உபகரிக்கப்பட்டன.

(3) கிருஷிக கைத்தொழிற்பொருட்காட்சி.

யாழ்ப்பாணத்திலே முதன்முதலாய் ஆயத்தஞ்செய்யப்பட்டதாகிய பொருட்காட்சியும் ஒருவாறு அனுகூலத்தோடு முடிக்கப்பட்டதெனலாம். டிஸதிறிக்கோட்டு வீட்டுக்குள்ளேயே காட்சிப்பொருட்கள்வைத்துக் காட்டப்பட்டன. 10 மணிவரையிற் காரியஸ்தர் முதலாவதாய்ப் பொருட்களைப் பார்வையிட்டு ஒவ்வொருவகையிலும் முதற்தரமாய்க் காணப்பட்டவைகளுக்கு உபகாரங்களையுந் தீர்மானித்தனர். பரிசுமுத்திரைகள் வெள்ளிக்கிழமை கொடுக்கப்பட்டன. காட்சிப்பொருட்கள் அதிகமாய் வரவில்லையென்பதே யாருங் கவனிக்கக்கூடிய குறிப்பாயிருந்தது. பொருட்களைப் பார்த்து வெளிவந்தார்பலர் நாங்கள் இவற்றிலும்பார்க்க மிகத் திறமான பொருட்கள் கொண்டுவந்திருப்போமேயெனக் கூறினர். வந்தபொருட்களில் வயல்தோட்டங்களிற் செய்கைபண்ணப்படுங் கிருஷிப்பொருட்கள் மிகச்சொற்பம். சுதேச கைத்தொழிலாளர் தினப்பிழைப்புக்காய்ச் செய்யுங் கைத்தொழிற்பொருட்களும் மிகுதியாய்க் கொண்டுவரப்படவில்லை. வந்த பொருட்களில் மிகுதியானவை நூதனக் காட்சிக்கென்று எண்ணி இயற்றிய பொருட்களாம். கம்மாளரொருவர் ஒரு கருங்காலித்துண்டில் செய்துவந்த சங்கிலி மிக நூதனமாய்க் காணப்பட்டது. எல்லாப் பொருட்களுள்ளும், இங்கிலிஷகாரர் அணியும் வைக்கோற்தொப்பிமாதிரியாய்ப் பனையோலைக்குருத்திலேயியற்றப்பட்டுவந்த தொப்பிகளே யாவராலும் வியக்கப்பட்டன. யாழ்ப்பாணத்தில் இதுவோர் தொழிலாய் ஏற்பட்டு வியாபாரப்பொருளாய் ஐரோப்பாவுக் கேற்றப்படுமேல் அதிலாபங்கிடைக்குமென்பதில் மயக்கமில்லை.

ஒருவர் செய்ததொழிலைத் தாமும் பார்த்துச் செய்வதன்றிப் புதுத்தொழிலிற் கையிட்டு வியாபாரஞ்செய்து பணமுழைக்க நம்மவர்க்குத் தெரியாது. தேங்காய்ச்சிரட்டைகளில் என்ன வடிவான பாத்திரங்களுண்டாக்கி வியாபாரப்பொருளாக்கலாம்.

பனைஓலையிற் செய்யப்பட்ட பெட்டிகளாதிய பன்னவேலைகளதிநூதனமாயிருந்தன. தனிக்கறுப்புவைரமாய்க் கொண்டுவரப்பட்ட பனைக்குற்றிக்கும் உபகாரங்கொடுக்கப்பட்டது. வன்னிப்பகுதியிலிருந்துவந்த 85 நெல்லுவகைகள் அதிநூதனப்பொருட்களாயிருந்தன. மெஸ். எஸ் கே. லோற்றன் அவர்களின் பிரதிமைப்படங்கள் முதற்தரமாய்க் காணப்பட்டு உபகாரத்துக்குரியனவாயின. கன்னியாஸ்திரிமடத்துப் பெண்பிள்ளைகள் செய்துகொண்டுவந்த பூக்கள், பின்னல்வேலைகள். தையல்வேலைகள் விசேஷ கவனிப்புக்கும் பரிசுகளுக்குமுரியனவாயின. போதியகாலத்துக்குமுந்தி அறிவிப்புக்கொடுக்கப்பட்டு பொருட்கள் அதிகமாய்க்கொண்டுவரப்படாமையால்சாதாரணதன்மையுள்ள பொருட்களுக்கும் பரிசுமுத்திரைகள் அளிக்கப்பட்டன. மகுடாபிஷேக கொண்டாட்டங்கள் நிறுத்தப்பட்டசெய்தி பரம்பியதும் பொருட்களதிகமாய்வராமைக்குக் காரணமாயிற்று. இது முதலாங்காட்சியானமையால் இவ்வளவில் அனுகூலத்துக்குக் கொண்டுவந்த காரியஸ்தருக்கு யாவரும் நன்றிகூறி, இவ்வகைக்காட்சி பலமுறையும் நடைபெறுவதற்கான ஆயத்தங்களைச் செய்வது கடமையாகின்றது.

### தென்ஆபிரிக்கா.

1642 ம் 1688 ம் வருடங்களுக்கிடையில் சுயாதீன ஆளுகைப் பிரமாணங்களுக்காக இராசாக்களுடன சண்டைசெய்து வெற்றிகொண்டதும், 1790 ம், 1815ம், வருடங்களுக்கிடையில் ஐரோப்பாக்கண்டத்தெழும்பிய நெப்போலியன் ஆதியாம் மன்னரோடு பொருது வெற்றிமாலைசூடியதுமாகிய இங்கிலந்துதேசமானது கலனிகளினுதவியோடு சென்றஇரண்டரைவருடக்காலமாய் அதிகஷ்டநஷ்டமடைந்துபோவர்களுடனே யுத்தம்பண்ணித் தென்ஆபிரிக்காவுக்கு நீதியும்சுயாதீனமுங்கிடைக்கும்படிசெய்தது. சுதேசகாப்பிரிகளை அடிமைகளாய் வைத்திருப்பதற்குத் தடைகாரராயிருந்த அங்கிலேயரைத் தென்ஆபிரிக்காவை விட்டுத் துரத்தித் தேசம்முழுவதையும் தாமேஆளுகைசெய்தல் வேண்டுமென்னும் நோக்கத்துடன் நெடுங்கால ஆயத்தங்கள்செய்து சண்டைதுவக்கிய போவர்களுடன நடத்திய இந்த யுத்தம் முன்முன் அங்கிலேயர் நடத்திய பெருத்த யுத்தங்களைப் போன்றவொன்றென்பதற்குச் சந்தேகமில்லை. இந்த யுத்தத்திலேயே பிரித்தானிய ராச்சியமானது பூமிமுழுதும்பரந்து நிலைபெற்றவோர் ராச்சியமென்பது தெளிவாயிற்று பலதிசைகளிலுமிருக்கும் அங்கிலேயகலனிகளெல்லாவற்றிலுமிருநது அங்கிலோசேனைவீரர் தென்ஆபிரிக்காசென்று வீரதீரங்காட்ட, அந்த நேரத்திலேயே சீனதேசத்திற் கிளம்பிய சண்டைக்கு இந்திய சுதேசிகளான சேனைவீரர்சென்று வாகைமாலைசூடினர். இங்கிலிஷ இராச்சியத்தின் பலம் எவ்வளவென்பதை மற்றும் இராசாக்களெல்லாரும் இந்த யுத்தத்தினாற் தெளிவாய்க் காணக்கூடியவராடினர்.

அதிதைரியத்தோடு விடாப்பிடியாய் யுத்தத்தை நடத்தி வாகைமாலைசூடினவராகிய லோட்கிச்செனர் சென்றமாதம் 23 ந் திகதி தென்ஆபிரிக்காவைவிட்டு இங்கிலந்துக்குப் பிரயாணமாயினர். போவர் நாடுகளின் சேனாநாயகமாய் ஜெனறல் லிற்றில்றன் நியமிக்கப்பட்டிருக்கின்றனர் மாபெகிங் பட்டணத்தைக் காத்த வீரதீரனாகிய ஜெனறல் பேடென்பவெல் போவர்நாடுகளைக் காவல்செய்யும் பொலீஸபட்டாளத் தலைவராய்க் கடமைபார்க்கின்றனர். லோட்மில்னர் போவர் நாடுகளின் தேசாதிபதியாயும், இலங்கையிலிருந்துசென்றவராகிய மெஸ. டேவிட்சன் கொலோனியல் சக்கிடுத்தாராயும், மெஸ். றோஸ் இன்ஸ சிரேட்டநீதிபதியாயும், சேர் றப்பேட் சலோமோன் அற்றேணிஜெனரலாயும்' மெஸ். டன்கன் தனதிபதியாயும், சேர் கொட்பிறே லாக்டென் சுதேசிகள் காரிய கம்மிஷனராயும், மெஸ். உவிபேக் சுரங்கங்களின் கம்மிஷனராயும், நியமனம்பெற்றுச் சத்தியஞ்செய்து கடமைபார்க்கின்றனர். மெஸ. ஸ்றீன், மெஸ. குறாகர் என்பவர்கள் சுகவீனராய்ப் படுக்கையிலிருக்கின்றனராம்.

கிறிஸ்தவர்களின் சனத்தொகைக் கணக்கு.—Christians and the Census.—இந்தியா முழுவதும்

கும் சென்சஸ் கமிஷனராக நியமிக்கப்பட்டிருந்த கனம் ரைஸ்லி துரை தாமெடுத்த சனத்தொகை கணக்கை வெளியிட்டிருக்கிறார். அக்கணக்கின்படி இந்தியாவில் இப்போதுள்ளசனத்தொகை 29 கோடியே 40 ஆயிரம். அதாவது 1891 ம் ஞு எடுத்த குடிமதிப்போடு ஒத்துப்பார்க்கில் இப்போது 70 லட்சம்பேர் அதிகரித்திருக்கின்றனரெனத் தெரியவரும. இதில் பிரிட்டிஷ அதிகாரத்துக்குட்பட்ட ராச்சிய கணக்குகளும் சுதேசமாகாண கணக்குகளுமடங்கியிருக்கின்றன. இத்தேசத்திலுள்ள பிரான்ஸ் போர்த்துக்கீஸ், அதிகாரத்துக்குட்பட்டிருக்கிற பாகங்களின் கணக்குகள் இன்னும் சேர்க்கப்படவில்லை. இந்திய கிறிஸ்தவர்களின் மொத்தத்தொகை 29,23.347. பத்துவருஷத்துக்கு முன்னெடுத்த சென்சஸ்கணக்குகளையும் இதையும் ஒத்துப்பார்த்தால் 6,39,007 பேர் கிறிஸ்தவர்களில் அதிகப்பட்டிருக்கிறார்கள். அதாவது 100 க்கு 28 பங்குபோல் அதிகமாயிருக்கிறார்கள். ஆனால் இத்தேசத்தின் மொத்தச்சனத்தொகை 100 க்கு இரண்டரைவீதம்தான் அதிகரித்திருக்கிறது. கிறிஸதவர்களோ இதற்கு 10 பங்கு அதிகமாய் அதிகரித்திருக்கின்றனர்.

ஐரோப்பியரையும் யூரேஷியரையும் தள்ளிவிட்டு சுதேசகிறிஸதவர்களைமாத்திரம் பார்த்தால் சென்சஸ்கணக்கின்படி அவர்களின்தொகை 26,64 359 எனத் தெரியவரும். அதாவது, இவர்கள் 100 க்கு முப்பத்தொன்றரைவீதம் அதிகரித்திருக்கிறார்களென கணக்கிடப்பட்டிருக்கிறது. கிறிஸ்தவர்களின் தொகை இவ்வளவாய் அதிகரித்திருப்பதற்குக் காரணமாய் கூறப்படும் விஷயங்களை தாம் வந்தனத்துடன் அங்கிகரித்து, மேற்படி கணக்கு பட்டிகளின் விபரங்களை விளக்க தமது அறிக்கையால் அவைகளைக் காட்ட மனமுள்ளவராயிருப்பதாக கனம் ரைஸலிதுரை கூறியிருக்கிறார். தவிரவும் கிறிஸ்தவர்களின் பற்பல உட்பிரிவுகளையும் சென்சஸ் கணக்கில் காட்டியிருக்கிறார், 1891 ம் வருஷத்தில் ரோமான்கத்தோலிக்க சபையாரைமாத்திரம் வேறாகப் பிரித்து அவர்களின் தொகை காட்டப்பட்டிருந்தது. மற்ற பிரிவுகள் காட்டப்படவில்லை. ஐரோப்பியரில் மூன்றிலிரண்டுபங்குக்கு அதிகமானபேர் இங்கிலாந்து சபையைச்சேர்ந்தவர்கள். யூரேஷியர்களுள் பாதிப்பேர்களுக்குமேல் ரோமான்கத்தொலிக் மார்க்கத்தை அனுசரிப்பவர்கள் மீதப்பேரில் ஏறக்குறைய எல்லாரும் இங்கிலாந்து சபையைச்சேர்ந்தவர்கள். சுதேசகிறிஸதவர்களைக் கவனிப்போமாயின் அவர்களில் 11,12,378 பேர் ரோமான்கத்தோலிக்மார்க்கத்தைச்சேர்ந்தவர்கள். இவர்களுடன் 3,12,583 சீரிய கிறிஸ்தவர்களும் ரோமைப்பாப்பானவரையே தங்களுக்குத் தலைவராகக்கொண்டிருக்கிறார்கள், ஆகவே, கிறிஸ்தவர்களில் பாதிப்பேருக்குமேல் கத்தோலிக் மார்க்கத்திலிருக்கிறார்கள். பத்துவருஷத்துக்கு முன்னிருந்ததைவிட இப்போது பாப்பானவரைத்தலைவராகக்கொள்வோர் 10.80 000 பேர் அதிகரித்திருக்கிறார்கள். அதாவது முன் 100 பேர் இருந்தால் இப்போது 115 பேரிருக்கிறார்கள். இது பார்க்கிறதற்கு பெருத்த விருத்தியாகக் காணப்பட்டபோதிலும், புரொட்டெஸடாண்டு கிறிஸ்தவர்களிலும் சீரியரல்லாத மற்றக் கிறிஸ்தவர்களிலும் சேர்ந்த உண்டானவிருத்தி இதிலும் பெரியது, 1891 ம் வருஷத்தில் இவர்கள் 7.70,000 பேர்மட்டும் இருந்தார்கள். இப்போதோ 100 க்கு 50 வீதம் இவர்களின்தொகை அதிகப்பட்டிருக்கின்றது. 1891 ல் சுதேசபுரோட்டெஸடாண்டு கிறிஸ்தவர்கள்மாத்திரம் 5 இலட்சம் பேரிருந்தார்கள். இப்போதோ அவர்களின்தொகை 9 இலட்சத்துக்கு எட்டிவந்திருக்கின்றது. அதாவது முன்னிலும் இரண்டத்தனையாயிவர்கள் பெருகிவர்திருக்கிறார்கள். இது புரொட்டெஸ்டாண்டு மிஷன் சங்கங்கள் செய்துவரும் வேலையின்பலனென்றே சொல்லவேண்டும். இது யாவராலுங் கவனிக்கப்படத்தக்கது. தென்னிந்தியாவிற்தான் கிறிஸதவர்கள் அதிகமானபேரிருக்கிறார்கள். தென்னிந்தியாவில்மாத்திரமுள்ள கிறிஸ்தவர்களின்தொகை 19,73,439 திருவாங்கூரில் 6 97,887 கிறிஸ்தவர்களும், கொச்சியில் 1,98,239 கிறிஸ்தவர்களும் உள்ள பெரிய தொகை கவனிக்கப்படத்தக்கதே பின்சொல்லப்படும் பற்பல உட்பிரிவுகளின்தொகையும் பலருக்கு சந்தோஷத்தை விளைவிக்கத்தக்கதே.

| | | |
|---|---|---|
| பாப்டிஸ்டு சபையார் | 2,16 743 | பேர். |
| லூதரன் சபையார | 1,53,768 | " |
| மெதோடிஸ்டுசபையார் | 68.451 | " |
| காங்கிரிகேஷனல்சபையார் | 37.313 | " |
| பிரஸ்பிற்றீரியர் | 42.799 | " |
| இரக்ஷணியசேனையார் | 19,000 | " |
| சீரிய கிறிஸ்தவர்கள் | 5,70 000 | " |
| லண்டன்மிஷன்சபையார் | 10.000 | " |

இந்தியாவின் சனத்தொகை விருத்தியையும், விசேஷமாய் இந்தியாவின் சுதேசகிறிஸ்தவர்களின் தொகைவிருத்தியையும், கவனித்து, இதே விகிதமாக சனத்தொகை வளர்ந்துகொண்டுபோகும்பட்சத்தில் அடுத்த நூற்றுண்டின்மத்திக்குள் இந்தியாமுழுதும் கிறிஸ்தவதேசமாகிவிடுமென்று சென்னை "டைம்ஸ்" பத்திரிகை கூறுகிறது. (ச—னி)

## யாழ்ப்பாணம்.

காலநிலை—Weather.—சோழகக்காற்று உரமாய்வீசுகின்றது. இரண்டுகிழமைகளின்முன் பெய்தமழை கமக்காரர் வயல்களுக்கு எருக்கஞ்சலிட்டுழுது விதைப்புக்காயத்தஞ்செய்வதற்கு வாய்ப்பாயிற்று.

புகைவீதி.—The Railway.—இந்தமாதம் 8 ந் திகதிதுவக்கம் பழைவரைக்கும் புகைவண்டிகளோடுமென்றும், அதன்பின்னும் செலவைக்கட்டத்தக்கவரும்படி வரவில்லையென்றுகண்டால், ஆட்களின் போக்குவரவுக்குரிய வண்டிகள் நிறுத்தப்படுமென்றுங்கேள்வி. பழை,காங்கேசன்றுறையிலிருந்து 35 கட்டையும் யாழ்ப்பாணத்திலிருந்து 24 கட்டையுமானபடியாலும், இடையில் ஆயங்களிருப்பதினாலும், பழைத் தென்னந்தோட்டங்களிலிருந்து கொப்பறாவாதிய பொருட்கள் ஏற்றிவருவதில் மாட்டுவண்டிகள் புகைவண்டியோடு எதிர்நிற்கமாட்டாவென நினைக்கின்றோம். தோட்டத்துரைமாரும் மற்றோரும் தமது சாமான்களைப் புகைவண்டிமூலமாயனுப்பி வரும்படிகாட்டிபுகைவண்டிகள் நிறுத்தப்படாது ஓடும்படிசெய்வது கடமையாகின்றது.

தேகவியோகம்.—Obituary.— மெஸ். பி. என். பொன்னையாப்பிள்ளை என்பவரின் மனைவியும் அமரிக்கன்மிஷன் பொக்கிஷக் கிளாக் மெஸ். அருளானந்தம் தானியேல் என்பவரின் சகோதரியுமாகிய மேரி மாணிக்கம் அம்மாள் கடந்தமாதம் 20 ந் திகதி வெள்ளிக்கிழமை, தமது புருஷன் உபாத்தியாயர் வேலையாயிருக்குமிடமாகிய பர்மாவிலே காலஞ்சென்றுவிட்டாரென்னுந் துக்கசங்கதி கேள்வியானோம். இவ உடுவிற் பெண்பாடசாலையிற் கல்விகற்று அரங்கேறினவ. பெண்களுக்கிருக்கவேண்டிய பொறுதி, சாந்தம், அடக்கம் முதலிய நல்லிலட்சணங்கள் பொருந்திய வோருத்தமியெனவறிகிறோம். கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள்.

வட்டுக்கோட்டைவாசரும் கொழும்புத் தலைமைப் பொலீஸ்கந்தோரில் வேலையாயிருப்பவருமாகிய மெஸ் உவில்சன் செல்லப்பாவின் முதற்புத்திரரும் சிங்கப்பூரில் கிளாக்குவேலையாயிருந்து சுகவீனமாய்ச் சென்னைஊருக்குவந்திருந்தவருமாகிய மெஸ். நவரத்தினம், சென்றமாதம் 15 ந் திகதி காலஞ்சென்றனரென்னுந் துக்கசங்கதி கேள்வியானோம். இவரது மரணத்திற் துயருறும் பிதாமாதா சகோதரர் சுற்றமித்திரருடன் நாமும் அனுதாபப்படுகின்றோம்.

புதியஅப்புக்காத்துமார்.— New Advocates.— கடைசியாய்நடைபெற்ற அப்புக்காத்துமார் பரீட்சையிற் சித்தியெய்தினவர்களான மெஸ். நவரத்தினராசா, மெஸ். சங்கரப்பிள்ளை எம். ஏ. என்பவர்களும் யாழ்ப்பாணத்தில் வேலைபார்க்குங் கருத்தோடு தத்துவம்பெற்று வந்திருக்கின்றனர். இவர்களோடு பரீட்சைகடந்தவராகிய மெஸ. பேேட் துரைச்சாமி வி. ஏ யும் தத்துவம்பெற்று யாழ்ப்பாணம் வந்திருக்கின்றனர். மெஸ். துரைச்சாமி தம்பு, மெஸ். எம். கனகசபை வி. ஏ. என்னும் புதிய அப்புக்காத்துமார் முந்தியே வேலைபார்க்கத் துவங்கிவிட்டனர், மேற்குறித்த அப்புக்காத்துமார் ஐவரில் மெஸ். நவரத்தினராசா தவிர்ந்த மற்றைநால்வரும் யாழ்ப்பாணக்கல்லூரிப் பழைய மாணவர்.

சி. எம், ஜி. பட்டம்.—Coronation Honours.— மகுடாபிஷேக சங்கையாய் இலங்கையிலுள்ள மூவருக்கு இராசசக்கிரவர்த்தியவர்கள் சி. எம். ஜி பட்டமளித்திருக்கின்றனர். வடமாகாணஏசண்டராகிய மெஸ். ஐவேஷ, சிங்களமகாமுதலியாராகிய மெஸ். பண்டாரநாயகி, இலங்கைக் கப்பற்தளபதியாயிருந்து உத்தியோகத்தாலிளைப்பாறும் கப்றின் டொன்னன் என்னும் மூவருமே அப்பட்டதாரிகளாம்.

ஓர்புதிய அங்கிளவித்தியாசாலை.-A New English School.—உடுப்பிட்டியைச்சேர்ந்த கெருடாவில் என்னுங் குறிச்சியில். யாழ்ப்பாணக்கல்லூரி ஆசிரியர்களிலொருவராகிய மெஸ. றி, பி. கட்சன் வீ. ஏ. அவர்களின்முயற்சியால் ஓர் இங்கிலிஷ் வித்தியாசாலைக் கட்டடம் நடைபெறுவதையறிந்து சந்தோஷப்படுகின்றோம். அவ்விடம் வேறு யாதோர் பாடசாலையுமில்லாமையால் இது அதிகநன்மைபயக்குமென்பதற்கையமில்லை.

ஆட்கள்.—Personal.—நெடுங்காலமாய்க் கச்சேரிச் சிறாப்பாயிருந்து மிகத் திறமையாய்வேலைபார்த்தவராகிய அம்பலவாணமுதலியார் உபகாரச்சம்பளத்துடன் இளைப்பாறப்போகின்றனர்.

சாவகச்சேரிக் கோட்டுத் தலைமைக்கிளாக்கும் துவிபாஷிகருமாகிய மெஸ். சிசைவீரசிங்கமும் வேலையிலிருந்திளைப்பாறும் விருப்பை யறிவிக்க, தேசாதிபதியவர்கள் அவர் உபகாரச்சம்பளத்துடன் இளைப்பாறலாமென உத்தரவளித்திருக்கின்றனர்.

வட்டுக்கோட்டைத் தபாற்கந்தோரதிபரான மெஸ். பாய்க்கசின் மூத்தகுமாரரும், தைப்பிங் சக்கிடுத்தார்கந்தோரிற் கிளாக்காயிருப்பவருமாகிய மெஸ் கண்ணுத்துரை பாய்க்கஸ மூன்றுமாதலீவில் யாழ்ப்பாணம்வந்து பெற்றார் சுற்ற மித்திரர்களுடன் சந்தோஷங்கொண்டாடுகின்றனர். இவர் யாழ்ப்பாணக்கல்லூரிப் பழய மாணவர்.

காசிநகரக் கல்லூரியொன்றில் வேலையாயிருப்பவரும் சிலவாரலீவில் யாழ்ப்பாணம்வந்துலாவினவருமாகிய மெஸ். உவில்லியம் யோன் எம். ஏ. சமுசாரசகிதராய்மறுபடியும் காசிநகர்க்குப் பிரயாணமாயினர்.

யாழ்ப்பாணக்கல்லூரியில் ஆசிரியராயிருந்து வேலைவிட்டுச்செல்பவராகிய கனம். தியோடோர் எல்மர் எம் ஏ. அவர்கள் அமரிக்காவில் முன் தாம்படித்த கல்லூரியாகிய "லாபெயெற்" கல்லூரியில் ஆசிரியராய் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

யாழ்ப்பாணக்கல்லூரியிலே அவருடைய இடத்தை நிரப்பும்படி யேல் சர்வகலாசாலையிலிருந்து வருபவராகிய கனம் பிச்நெல் எம். ஏ. அவர்கள் விவாகம்முடித்துக்கொண்டுயாழ்ப்பாணம்வரப் புறப்பட்டுவிட்டனர்.

பாரியாரின்சுகவீனங்காரணமாய் அமரிக்காசென்றவராகிய அவுலந்துபண்டிதர் அல்பமாமாகாணத்திலுள்ள கல்லூரியொன்றில் வேதசாஸதிர ஆசிரியராயிருக்கின்றனர்.

யாழ்ப்பாணக்கல்லூரியிலிருந்துசென்று கடைசியாய்நடைபெற்ற வீ. ஏ. பரீட்சையிற் சித்தியெய்தினவராகிய மெஸ். எஸ. கே. பொன்னையாவும், எவ். ஏ. பரீட்சையிற் சித்தியெய்தினவர்களிலொருவராகிய மெஸ். வி. பொன்னையாவும் வட்டுக்கோட்டை இங்கிலீஷவித்தியாசாலையில் உபாத்தியாயர்களாய் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

கனம். றைஸபோதகரின் இரண்டாம் புத்திரரான மெஸ். சாமுவேல் றைஸ காரைதீவ இங்கிலிஷபாடசாலையின் ஆசிரியராய் நியமனம்பெற்றுக் கடமைபார்க்கின்றனர்.

முன் இலங்கையின் வித்தியாகர்த்தராயிருந் திளைப்பாறினவராகிய மெஸ். கல் அவர்கள் இங்கிலந்திலே காத்திராப்பிரகாரங் காலஞ்சென்றனரென்னுந் துக்கசங்கதியெட்டிற்று.

புதிதாய் அற்றேணிச்ஜெனரலாய் நியமனம்பெற்றவராகிய மெஸ். ஏ. சி. லாசெல்லஸ் இலங்கைவந்து சத்தியஞ்செய்து தமதுகடமை கையேற்றுநடத்துகின்றனர்.

வித்தியாகர்த்தர் மெஸ. பறேஸ் அவர்களின் முயற்சியால் இங்கிலிஷ உபாத்திமாரை ஆயத்தம்பண்ணுவதற்காய்க் கொழும்பில் ஸ்தாபிக்கப்படப்போகிற போதனகல்லூரிக்குத் தலைவராய்த் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் மெஸ். ஈவான்ஸ புரட்டாசிமாதத்திலேயே இலங்கைவந்துசேருவார்.

யாழ்ப்பாணத்தில் வைத்தியப்பகுதிக்குத் தலைவராயிருந்த டக்தர் மறேஸ் மட்டக்கழப்புச்சென்றுவிட,அவருடைய இடத்துக்கு டக்தர் ஸ்பிற்றிள் நியமனமாகிக் கடமை கையேற்றுநடத்துகின்றனர்.

மட்டக்கழப்புக் கச்சேரியில் நாலாங் கிளாக்காயிருப்பவரும், இரண்டாம்படியான சிவில்சேர்விஸ உத்தியோகதிற்குத் தேசாதிபதியாற் தெரிவுசெய்யப்பட்டவருமாகிய மெஸ. வி. வல்லிபுரம், கோட்டுவிளக்கப்பிரமாணங்களில்வைக்கப்பட்ட பரீட்சையிற் சித்தியெய்தினரென அறிகின்றோம். இவருக்குச் சீக்கிரத்தில் நீதவான்வேலை நியமிக்கப்படும்.

யாழ்ப்பாணவாசரும், மானிப்பாய் மெஸ். சுவாமிநாதரின் மருகருமாகிய, மெஸ். இராசசுந்தரமுதலியார் தம்பிப்பிள்ளை கெடுந்தீவிலே குறுக்குறோட்டுப்பகுதியில் ஓவசியராய் நியமனம்பெற்று இந்தமாசம் வேலைக்குப்போக ஆயத்தமாகின்றனர்.

## வடதேசம்.

தசவருடஆலோசனைக்கூட்டம்.—Decennial Conference.—இந்தியாவிலே பத்துவருடத்துக் கொருமுறை வைக்கப்படுவதாகிய சுவிசேஷ மிஷன் வேலைகாரரின் ஆலோசனைக்கூட்டம் இவ்வருடம் சென்னைநகரில் வைக்கப்படும். இந்தியா இலங்கையென்னுமிடங்களில் சுவிசேஷஊழியம்நடத்தும் புரொத்தெஸ்தாந்து மிஷன்சங்கங்களின் பிரதிஸ்தர் அவ்விடஞ்செல்வர்.

## கடிதம்.

### சாஸ்திரவினா.

ஐயா!

பின்வரும் வினாக்களைத் தங்கள் பத்திரிகையில்பிரசுரித்து, தக்க விடை ஆதாரத்துடன் தந்து என் சந்தேகங்களைநிவிர்த்திசெய்யுமாறுதங்களைவேண்டுகின்றேன.

க வது. ஐரோப்பியர்,அரபியர், வட இந்தியர், பேபியர், சீனர் முதலிய சகல சாதியாரும் (Hieroglyphic) பரிபாஷையாகும் மேடம்முதல் மீனம்ஈறாகவுள்ள 12 இராசிகளையும் இடப்புறமாக அச்சிட்டும் வழங்கியும்வர, தென்இந்தியரும் இலங்கையினரும் மேற்படி ராசிகளை வலப்புறமாக அச்சிட்டும் வழங்கியும்வருவதற்கு நியாயம் யாது? இவர்களில் யார்சரி யார்பிழை. இருதிறத்தாரும் (Equal) சரியெனின் எக்காரணத்தால் என உதாரணத்துடன் கூறல்வேண்டும்.

நட்சத்திரக் கூட்டங்களினால் வகுக்கப்பட்ட 12 இராசிகளும் ஒன்றுக்குப்பின்னொன்றாய்க் கிழக்கேயுதயமாகி வருவதை நாம் காண்கின்றோம். "ஜூன்"மாதமாகிய இந்தமாசத்தில் மேற்கே சூரியன் மறைந்தவுடன் கிழக்கே நோக்கும்பொழுது "விருச்சிக" ராசியைக் காண்கின்றோம. அவ்வாறே சற்று நோக்கினின்றால் "விருச்சிகம்" சற்று உயர அடுத்த இராசி "தனுசு" (Right-ascension) கிழக்கே உதயமாகிவருகின்றது. இவ்விதமாக மற்றவைகளையும் காண்கின்றோம். இவைகளை இப்படிப் பிரத்தியட்சமாய்க்காண உலகத்தில் இருபுறமாய் எண்ணவேண்டிய காரணம் யாது?

உ வது. சூரியன், சந்திரன், குஜன், புதன், குரு, சுக்கிரன், சனி, ராகு கேதுவாகிய நவக்கிரகங்களும் மேற்கூறிய 12 இராசியையும் தனித்தும்கூடியும் அவரவர் கெதியின்படி சிலகாலம் தங்கியும் பின்முன் அசைந்தும் சுற்றிவருகின்றார்கள். இவ்வாறுவரும் அவைகளின் சுற்றோட்டத்திற்குத் தொடக்கமாவது அந்தமாவது உண்டா? உண்டேல் ஆதாரத்துடன் விடைகூறல்வேண்டும். மேற்கூறிய கிரகங்கள் சிலசில ராசிகட்கு, ஆட்சி, உச்சம், பகை, நட்பு, நீசம், சமம்என இந்தியர்போன்று அங்கிலேயரும் மற்றும் சாதியாரும் வழங்கிவருகின்றார்கள். இப்படிக்கொள்வதற்கு நியாயம் யாது? என்னஎன்னகாரணத்தால் ஆட்சி பகை முதலானதி வந்ததுஎன விரித்துரைக்கவேண்டுகின்றேன்.

ௗ வது. 12 ராசியிலும் நிற்கும் 27 நட்சத்திரங்களுக்கும் இங்கிலிஷ நாமங்களெவை?

ச வது. இந்தியர் அருந்ததி என வழங்கும் நக்ஷத்திரம் எது? துருவன்என்பது எதனை? இவை இருநாமமும் ஒன்றா? வேறா? துருவன் இடம்விட்டு மாறும் என இந்தியரின் சாத்திரங்களில் எங்காவது கூறியிருக்கின்றனவா? தற்காலம் (North Polestar) வடதுருவநக்ஷத்திரமாயிருக்கும் நக்ஷத்திரததுக்கு இந்தியர் அழைக்கும் நாமம் யாது? இங்ஙனம், அம். பொன். அம்பலவன்,

7—6—02.

## The King.

Extensive preparations had been made in Great Britain and her Colonies for the crowning of Edward VII as King when like a thunder bolt from a clear sky came the news on Wednesday the 25th, of the King's serious illness. It seems that His Majesty had been suffering more or less for twelve days from a malady connected with the intestines (perityphlitis.) He hoped that he would be able to go through with the function without breaking down, but two days before the coronation, his physicians warned him that unless an operation was performed at once, he would in all probability live but a few hours. Chloroform was administered and the surgeons operated and the bulletin of the following day reported that the operation had been quite successful and the King had been relieved. The pulse and temperature were normal. On the 27th it was officially reported that the Royal patient was maintaining his strength though there was some return of pain in the wound. He was also showing desire for food.

On the 28th the bulletin said, "The condition of the King is in all respects satisfactory. He passed a comfortable day. There is a substantial improvement."

Such in brief is the record up to Monday of this week, and we can only pray that no recurrence of this trouble may occur and that he may soon gain health and strength. For how long the coronation ceremonies will be postponed cannot be determined just at present. No doubt information will be given as soon as it is possible to do so. It is hoped that a day may be set in the early autumn. In the meantime we unite with all his loyal subjects the world over in the prayer

GOD SAVE THE KING.

## Agri-Horticultural Show and Industrial Exhibition

The sudden and unexpected news of the illness of King Edward VII received only the day before that fixed for the Coronation, put a stop to all the festivities planned for Thursday, Friday and Saturday with the exception of feeding the poor and holding the Agri-Horticultural Show. Exhibits for the latter had already been received and allotted place in the District Court House, so it was thought best to carry it through. The uncertainty, however, attending the sad news undoubtedly deterred some from sending in exhibits, thus making the show less successful than it otherwise would have been. As it was, the exhibition was a genuine surprise to many who had been skeptical as to its success. There is every reason to think that once every two or three years, such an exhibit of the natural products of Jaffna would prove of great value to the country at large. It is to be hoped that this display of Jaffna's products will awaken enthusiasm, and result in some action looking to the holding of another exhibition next year or the year after.

The Agricultural exhibits were very satisfactory as to grains and tobacco, but most unsatisfactory in vegetables, fruits and live stock. There was a fine display of the various kinds of paddy grown in different parts of the Northern Province and also a fairly good exhibit of the dry grains. This display alone was well worth going to see. Tobacco was shown in the form of the dried leaf and also as cigars. There was no exhibit of Indian corn, nor of the palmirah odeyals and their preparations.

Of vegetables we had only two varieties of purple yams and sweet potatoes, all excellent specimens. But where were the various vegetables of the country? Not even the brinjal put in an appearance and there are two or three distinct varieties. As to fruits there were a few fine oranges and pine-apples. Only one variety of mango was on show and the fruit was small and imperfect. The few limes were small. Not a plantain was to be seen, and as for grapes, jak custardapples, pomegranates, and other fruits, one would naturally conclude that they were not found in the Province. Not a plant or flower was on exhibition but this was not so surprising as the absence of fruit and vegetables. We mention these, not so much to find fault that they were not represented as to prove that if every one had taken pains to bring in what he could, a much larger and more various exhibit would have been the result. There was a bottle of remarkably clear honey from the jungles and some fine specimens of palmirah fibre and ropes. An especially curious specimen of the latter was made from deer's hide. It looked very strong and durable. Only one exhibit of copperah, and two others of cocoanuts were made. The plate of finely cut arecanut was interesting to see as long as it lasted, but it melted away rapidly before the string of sight-seers.

The display of industrial exhibits was very good. The finest exhibits were sent in from the Roman Catholic Institutions and they received a number of prizes. A handsome inlaid table was very much admired. The lace and the embroidery showed what could be done along these lines in Jaffna. The drawn work from Uduvil and Vempadi Boarding Schools elicited admiration from the ladies present. The little children's garments sent in from the Chundikuly Girls English School were very pretty and well made. A very curious exhibit was the display of two hats and a cap looking for all the world like the straw hats of Europe but really made from the tender leaves of the cocoanut palm. Surely here is an opportunity for developing a new industry in Jaffna.

Messrs. Nalliah and Son presented a good display of turbans which were much admired, and this enterprising firm had other exhibits also such as specimens of binding, rubber stamp outfits &c. &c. The Catholic Press was the only one exhibiting lithographic and printing specimens. As was to be expected Messrs. S. K. Lawton and Co. made a fine display of photographs though many of the pictures must have been ruined by the careless handling of the visitors.

The show of jewelry was meagre owing possibly to lack of proper accommodation for such valuables.

There was a fair collection of ola baskets though not including many kinds in ordinary use in the peninsula. The pieces of pottery were not numerous, and here it seems to us that great improvement could be made not only in the quality of the pots but also in the variety. In models there were several of great interest to the crowd. The models of tools made by a Batticotta carpenter were much admired. A curious ruler made by winding tightly around a rod strips of palm leaf was a novelty. We wonder if it would stand wear. Of marine products, we had several specimens of the Beche de-mer, or sea-slug, prepared for export. It is said that this is getting to be quite a delicacy in France and that China does not by any means monopolize the trade. The specimen of sponge shown was large, but coarse and of poor quality. It would be worth experimenting to see if sponges would grow in our lagoons.

The display of bread and cakes was disappointing. One naturally expected to see a fine lot of native cakes and specimens of the different kinds of hoppas, but not one appeared to tempt the Epicure. There was one good loaf of wheat bread, and a highly decorated (frosted) English cake made by one of the servants of a missionary, but this was about all. Of pickles and chutnies there were none and yet Jaffna can produce excellent Lime and Mango pickles, to say nothing of other varieties.

In conclusion, mention should be made of certain curious things grouped under *Miscellaneous*. There was an elephant's foot for example, painted and polished and made into a box by putting on a cover with lock on top. This was a very fine specimen as well as a great curiosity. Some pipes with carving on them by the Boers, attracted considerable attention. A fine specimen of the "sea cocoanut" as it is called, painted and polished, was also an object of curiosity. A chain consisting of several links carved out entire from a single stick of ebony, showed skill on the part of the carver. A fine specimen of wood was a palmyrah log which, standing on end, was 3 to 4 feet high, and beautifully polished.

Permission had been granted for a display of aluminium vessels manufactured in Madras. It seems that an agency for this ware has been established in Jaffna. The prices of the different articles are too high as yet to make them popular among the masses.

All things considered the show must be pronounced a success. It was Sir William Twynam who first proposed some 12 years or so ago that such an exhibition be held; and extensive preparations were made for holding one, even to the striking off of a number of silver medals. But owing to unforeseen circumstances, the function was postponed, and no other opportunity presented itself for holding such an exhibition until last week. The medals prepared twelve years ago, were given as prizes and were greatly admired as specimens of Jaffna work. To Sir William and to the Treasurer, Rev. W. T. Garret who was indefatigable in his efforts to make the show what it should be, Jaffna owes the success of this first Agri-horticultural, and industrial exhibition.

### Medals Awarded.

The Roman Catholic Industrial school obtained medals in cabinet work, and fresh work; the St. Joseph's Press in Printing, Lithography and Book-binding; St. Patricks College for croton leaves, and the Convent for Needlework. Mr. Sivasithamparam Modr. won medalsfor polished wood specimens, and pottery. The Karachchi and Poonarin Maniagars obtained medals for paddy, kurrakkan, varaku, erllu, ghee, jungle ropes, fibres, and marine products. Others that won medals were as follows:—

Mr. de Niese for plan and map drawing, and picture; Mr. Nalliah for rubber stamps, and turbans; Mr. Kanagasapai for yams; Rev. T. P. Hunt for pineapples; Mr. Sabapathy for oranges; the Tenmarachi Maniagar for sweet potatoes: Mr. Mather for palmyrah fibre; Mr. Picchai Kani for cocoanuts and copperah; Mr. Palasundram for straw hats; the Maniagar of Vallegamam East for fancy dress; Mr. Kandasamy for parchment illumination; Mr. Swampillai for cigars and Mr. Manualpillai for tobacco; Mr. Pedropillai for cake and Mr. Valupillai for bread; Mr. Appah for walking sticks and Mr. Swaminather for model implements; Mr. Sithamparanather and Mr. Chellam for gold and silver work; Mr. Duraiswamy for models in clay and also for bullock cart; Mr. S. K. Lawton for photographs; Jaffna A water Factory for Aerated waters; Miss Case for preserved fruits; and Miss Hopfengartner for painting on flat shell. And even the Boer prisoners received a medal for their carving. Altogether there were 60 medals given.

## THE CORONATION PANDAL.

The most beautiful pandal ever erected in Jaffna for a public function was the one put up on the esplanade near the Fort in honor of King Edward VII. The work was all finished except putting up the many flags representing almost every nation on the earth, and these, owing to the sad news, were on display *within*.

The pandal was greatly admired by the crowds of people who naturally took a deeper interest in it than they did in the Agri-horticultural show. The whole northern side facing the esplanade was built in facades decorated with cocoanut leaves and various products of the palm. Bunches of plantains and other fruits were used in the decoration and the whole presented a very oriental aspect. We were told it was after the style of Sinhalese dandals, and was largely the work of the Head clerk of the Jaffna Kachcherri.

Within, there were pictures round the three walls representing the different colonies of the Empire, and back of the dais was a large likeness of the King and Queen. There was the usual canopy of cloth overhead, and decorations made from colored paper &c. The whole gave a very pleasing effect, and we congratulate all who had a hand in its erection on their success in putting up a pandal which excelled all its predecessors in real beauty.

## MISS A. E. STEPHENSON.

The news of the death of this missionary lady at her mother's home in England was not wholly unexpected. She broke down in health about a year ago and left Jaffna with very little hope of ever returning to mission work. She was a member of the Wesleyan Mission and the daughter of missionary parents formerly labouring in South India. While in Jaffna Miss Stephenson was connected with the Vempadi Girls Boarding School, and by her bright winning ways and her loving devotion to her pupils, won their hearts So greatly had she endeared herself to her pupils that the news of her death caused genuine sorrow in many families, and the expressions of grief were very touching. While we mourn the loss of another earnest consecrated worker, we cannot but rejoice at her release from pain and sickness and her re union with loved ones in "the many mansions."

A memorial service was held last Sunday in the Wesleyan Chapel, Jaffna, Rev. E. M. Weaver preaching the sermon. We extend our sympathies to the bereaved mother, and to the many friends in the home land and elsewhere.

Printed at the Press of Strong and Asbury, Manepay.
Published by A. C. Mission and Tambyah Strong Cooke.